# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி – 12 | 26-05-2003 | திங்கட்கிழமை | ஓசை 97



வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical
கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்திய துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும்.
வவுனியா ஒப்டிக்கல்,
30 பஸ் நிலையம்,
வவுனியா. (ச-7864)


# எரிக் சொல்கெய்ம்-கெல்ஹேசன் மீண்டும் கொழும்பிற்கு வருகை!

## பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள தடங்கல்களைப் போக்க முயற்சி





(கொழும்பு)

**நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்கெய்ம் நேற்று கொழும்பிற்கு வருகை தந்துள்ள அதேவேளை, நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன் இன்று கொழும்பிற்கு வரவுள்ளார். இவர்கள் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளைப் போக்குவதற்கான தீவிர முயற்சியில் ஈடுபடுவார்கள் எனத் தெரியவருகின்றது.**

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்கெய்ம் நேற்று கொழும்பிற்கு வருகை தந்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தற்பொழுது ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலையை நீக்கி இரு தரப்பினரையும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளச் செய்வதை உறுதிப்படுத்தும் முகமாகவே இவரது கொழும்பு விஜயம் அமைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எரிக் சொல்கெய்ம், சிறிலங்கா பிரதமர், அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக, அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## 'சிரான்' கூட்டம் ஒத்திவைப்பு; புலிகள் அரசாங்கத்திற்கு அறிவிப்பு!

'சிரானின்' அடுத்த கூட்டத்திற்கான திகதி நிர்ணயிக்கப்படுவதற்கு முன்பாக அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் அரசிற்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்ட விடயங்களில் முன்னேற்றம் காணப்படுதல் வேண்டும் எனத் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் சிரானுக்கான அரச குழுவின் தலைவரான பேணாட் குணதிலகாவிற்கு எழுதிய கடித்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் உடனடி மனிதாபிமான புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவின் சிரான் கூட்டத்தை பிற்போடுவதாகவும் அறிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த கால சிரான் கூட்டங்களில் மனிதாபிமான வாழ்

(08ஆம் பக்கம் பார்க்க)

### கனடாவிலுள்ள தமிழ் அகதிகளை
## திருப்பி அனுப்புவது குறித்து கனடா அரசு பரிசீலனை

கனடாவில் உள்ள தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. தற்போதைய சமாதான சூழ்நிலைகளையடுத்தே இது குறித்து கனேடிய அரசு பரிசீலித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனேடிய அரசு இலங்கையின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பான அறிக்கையை இலங்கைக்கான உயர்ஸ்தானிகரிடம் கோரியுள்ளது.

இதனை அடுத்து கடந்த திங்கட்கிழமை முதல் கிழக்கு மாகாணத்திற்கான ஐந்து நாள் விஜயத்தை கனேடிய உயர்ஸ்தானிகர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் யோசனைகள் குறித்து பிரதமர் பல தரப்பினருடனும் ஆராய்வு

### விரைவில் பதில் அனுப்பப்படும்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு இடைக்கால நிர்வாக அமைப்புத் தொடர்பாக விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பல தரப்பினருடனும் ஆராய்ந்து வரும் அதேவேளை, அதற்கான பதிலை விரைவில் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பிவைப்பார் எனவும் அரசாங்கத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து முதலில் சிரேஷ்ட அமைச்சர்கள், சட்டநிபுணர்களுடனும் தீவிரமாக ஆலோசனை நடத்தியதாகவும் பின்னர் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் ஆலோசனைகளை நடத்திவருவதாகவும் அரச வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு தனியான இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அரசாங்கம் வழங்க வேண்டும் என்று கலாநிதி விக்கிரமபாகு கருணா ரட்ண வலியுறுத்தியுள்ளார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## வவுனிக்குளத்தில் இரு தற்கொலைகள்

வவுனிக்குளம் பகுதியில் இரண்டு தற்கொலைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. வவுனிக்குளம் செல்வபுரம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இளம் பெண்ணொருவர் தற்கொலை செய்து கொண்டதன் பின் வெள்ளிக்கிழமை அதே வீட்டில் இரவு வேளையில் குடும்பஸ்தரான இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இம்மரணம் தொடர்பான விசார

(08ஆம் பக்கம் பார்க்க)

## அமெரி. ராஜதந்திரிகள் இருவர்மீது விசா மோசடி குறித்து விசாரணை

அமெரிக்கத்தூதரகத்தைச் சேர்ந்த மேலும் இரண்டு இராஜதந்திரிகள் விசா மோசடி தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் பல மில்லியன் ரூபாக்கள் மோசடியுடன் தொடர்புடைய இந்த விவகாரத்தில் அமெரிக்கத்தூதரகத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டி

(08ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பு குற்றப்புலனாய்வுத் தலைமை அலுவலக வாயிலில்
## தென்மாகாணசபை அமைச்சர் இனம் தெரியாதோரால் சுட்டுக்கொலை

(கொழும்பு)

பொ.ஐ.முன்னணி அரசியல்வாதியும் தென்மாகாண சபையின் கமத்தொழில்துறை அமைச்சரும் சண்டிமல்லி என அழைக்கப்படுபவருமான எம்.கே.ரஞ்சித் (வயது-42)நேற்றுக் காலை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கொழும்பு கோட்டையில் உள்ள குற்றப் புலனாய்வுத் தலைமை அலுவலகத்தின் பிரதான நுழைவாயிலில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது, சட்ட விரோத ஆயுதங்களை வைத்திருந்தமைக்காக இவர் சில மாதங்களுக்கு முன்னர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் கைது செய்யப்பட்டதையடுத்து ஒவ்வொரு மாதமும் ஞாயிற்றுக் கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்துக்கு சமுகமளிக்குமாறு பணிக்கப்பட்டிருந்தார். இதன்படி நேற்று குற்றப்புலனாய்வுத் துறை தலைமையகத்துக்கு வருகைதந்து திரும்பும் போது இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

உயர்பாதுகாப்பு வலயத்தில் இடம்பெற்ற இத் தாக்குதலால் அப் பகுதியின் பதுகாப்பு கேள்விக்

(08ஆம் பக்கம் பார்க்க)

### அயலவருடன் காணித்தகராறு
## கரவெட்டியில் இளைஞர் கடித்துக் குதறப்பட்டார்

கரவெட்டி இராஜகிராமம் பகுதியில் காணித்தகராறு காரணமாக ஏற்பட்ட சண்டையில் கழுத்துப்பகுதி கடித்துக் குதறப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவர் மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இரத்தினம் ஜெசிந்தன் (வயது-20) என்பவரே காயமடைந்தவராவார். இச்சம்பவம் தொடர்பாக தெரியவருகையில், சம்பந்தப்பட்ட நபர் காணித்தகராறு காரணமாக அயல் வீட்டுக்காரரிடம் சச்சரவில் ஈடுபடச் சென்ற போது அயல் வீட்டுக்காரர் இவர் மீது பாய்ந்து அவரது கழுத்துப் பகுதியை கடித்துக்குதறியுள்ளார் காயமடைந்தவர் தற்போது ஆபத்தான நிலையில் உள்ளார். (27)

## வடமராட்சியில் பல்கலை. மாணவன் வெள்ளை வானில் வந்தோரால் கடத்தல்

(வடமராட்சி)

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவர் வெள்ளைவானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

பொலிகண்டி விளையாட்டு மைதானத்தில் மாணவர்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சியினை வழங்கிக் கொண்டிருந்த போதே நேற்று முன்தினம் மாலை அப்பகுதிக்கு வந்த வெள்ளைவான் காரரால் கடத்தப்பட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல்துறை டிப்ளோமா பீடமாணவனும் வல்வெட்டித்துறை நகர கிராமசேவையாளரின் மகனுமான சிவபாலசிங்கம் சரவணன் (வயது-21) என்பவரே கடத்தப்பட்டவராவார்.

இராணுவ பாதுகாப்பு அரண்கள் மற்றும் முகாம்கள் அமைந்துள்ள இப்பகுதியில் இவர் பயிற்சியினை வழங்கிக் கொண்டிருந்த போது அப்பகுதிக்கு ஹையஸ்வாகனத்தில் வந்த இவர்கள் அவரை விசாரணைக்கு உள்ளாக்கிய பின்னர் கடத்திச் சென்றுள்ளனர்.

இந்த வாகனம் அப்பகுதியில் சுமார் ஒருமணிநேரத்துக்கு மேலாக சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (27)

## வரிவிளம்பரம்

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும்பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3256)

### தேவை

வயோதிப மாதுவைப் பராமரிக்க பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். விபரங்கட்கு தீன்சுவையகம் - கண்டி வீதி, மாங்குளம். (சி-7872)

### தேவை

தேர்ச்சிபெற்ற சமையலாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தீன் சுவையகம், கண்டி வீதி, மாங்குளம். (சி-7873)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு

புதிய (**BRAND NEW**) கீறோ கொண்டா. ஸ்ரீட் சிமாட் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்பவர் பெயரில் பதிவுப் புத்தகம் செய்து தரப்படும். தொடர்புக்கு: ஞா.சிவராசா, வ.வேலுப்பிள்ளை, 02ஆம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு. (3219)

### தவறிவிட்டது

கடந்த 23-05-2003 அன்று கிளி நகர்ப்பகுதியில் தம்பிப்பிள்ளை ராஜகுமார் ஆகிய எனது தே.அ. அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கிய கைபேஸ் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (3287)


# குமரபுரம் அ.த.க. பாடசாலை கற்றல் உபகரணம் வழங்கல்!

விசுவமடு குமரபுரம் அ.த.க பாடசாலை மாணவ சிறார்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சவேரியார் இளைஞர் உருவாக்க இயக்கத் தலைவர் ம.ஜோன்சன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தருமபுரம் பங்குத் தந்தை யூட்நிக்சன் அவர்கள் 171 பாடசாலை மாணவர்களுக்கும், இப்பகுதி பாடசாலை செல்லாத 40 சிறார்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கியுள்ளார். அத்துடன் இம் மாணர்களுக்குப் பிரதி சனிக்கிழமைகளில் தமிழ் ஆங்கிலப் பாடங்கள் கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிளிகுமாரசாமிபுரம் அ.த.க. பாடசாலை அதிபர் செல்வி. தி.நடராசா, கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் சிறிஸ்கந்தராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.(14)

## தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால்

# உணவல்லாத பொருட்கள் சிறுவர் இல்லத்திற்கு வழங்கல்

கிளிநொச்சி மாவட்ட தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தால் கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் அமைந்துள்ள திருக்குடும்ப சிறுவர் இல்லத்திற்கு உணவல்லாத பாவனைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வரும் சிறுவர்களின் எதிர்கால மேம்பாடு குறித்தும் அவர்களின் செயற்பாடுகளுக்கு உதவியளிக்கும் வகையிலும் இப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் உருத்திரபுரத்தில் அமைந்துள்ள ஆரோபணம் இளைஞர் இல்லத்துக்கான விளையாட்டு உபகரணங்களும் புனர்வாழ்வுக்கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது. (லோ)

# தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

கிளிநொச்சி வலய பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ கல்விக்கழக நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ளது. எனவே இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி வலய பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் வடமாகாண தொண்டராசிரியர் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறும் கிளி.வலய தொண்டராசிரியர் ஒன்றியச் செயலாளர் கேட்டுள்ளார். (லோ)

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வீரமுரசு நிகழ்வு

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வீரமுரசு நிகழ்வு கடந்த 22ஆம்திகதி இரவு 10.00 மணியளவில் கற்சிலைமடு பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது நிகழ்வில் பொதுச்சுடரினை கோட்டதேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் அ.திருநாவுக்கரசு ஏற்றினார்.

போராளி அமுதநிலா மாவீரர் பாடல் பாடியதைப் தொடர்ந்து கற்சிலைமடு மாணவர்களின் விடிவெள்ளி நாடகம், சோதியா படையணியின் நடனமும், நிரந்தரமாகிவிட்ட நினைவுகள் நாடகமும் நடைபெற்றன. சிறப்புரைகளை கற்சிலைமடு பாடசாலை அதிபர் பொ.அருமைச்சந்திரன் முல்லை மாவட்ட அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் சு.இசையழகன் முல்லை மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழ்நிலவு ஆகியோர் ஆற்றினர். (05)


# தவணை தப்பிய சி.க.கூ. சங்கங்களுக்கான அறிவிப்பு

முல்லை. மாவட்ட சி.க.கூ. சமாசத்திடம் கடன் பெற்று தவணை தப்பிய நிலையில் இயங்காதுள்ள சங்கங்களின் சமாசத்திலுள்ள வைப்புக்கள் அச்சங்கத்தின் கடன், வட்டி என்பவற்றிற்கு எதிராக கழிவு செய்யப்பட வேண்டியுள்ளது. இயங்காதுள்ள சங்கங்களில் வைப்புச் செய்துள்ளவர்கள் தங்கள் வைப்புக்களை மீட்டுக்கொள்வதில் ஆர்வமாயிருப்பின் 2003-06-10 ஆம் திகதிக்கு முன் தங்கள் பகுதியிலுள்ள வெளிக்கள அலுவலகருடனோ, சமாசத்துடனோ தொடர்பு கொண்டு எதிர்வரும் 2003-06-30 ஆம் திகதிக்கிடையில் அச்சங்கங்களை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவ்வாறு செய்யத்தவறுமிடத்து கடன், வட்டி என்பவற்றிற்கு எதிராக சேமங்கள் கழிவு செய்யப்பட்டு புதிய நிர்வாகிகளுடன் சங்கம் புனரமைக்கப்படும் என்பதை சங்கங்களின் நிர்வாகிகளுக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்: **மாவட்டச் செயலாளர்,**
**சி.க.கூ. சமாசம்,**
**முல்லை. மாவட்டம்.**

(சி-7742)



# பிரதம பொறியியலாளர் அலுவலகம் கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) கிளிநொச்சி

(01) கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கிளிநொச்சி கட்டடங்கள் திணைக்களப் பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச்சபையால் 2003ஆம் ஆண்டு யூன் மாதம் 06ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிவரை முரசுமோட்டையில் உள்ள கிளிநொச்சி கட்டடத்திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தினால் அலுவலக நேரத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகவே எமது அலுவலகத்தினால் திறக்கப்படும். கேள்வி கோருபவர் அல்லது அவரால் முறைப்படி அங்கீகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் கேள்விகள் திறக்கப்படும் போது சமுகமளிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

(02) நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (**ICTAD**) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு கீழே குறிக்கப்படும் தரவுகளையுடைய அல்லது அதற்கு மேற்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டும் கேள்விப்பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையவராவர்.

(03) ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்படும் இற்றை வரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப்புத்தகத்தை முரசுமோட்டையில் உள்ள கிளிநொச்சி கட்டடத்திணைக்கள பிரதம பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(04) தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப்பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப்பணத்தை முரசுமோட்டையில் உள்ள கிளிநொச்சி கட்டடத்திணைக்கள (மாகாணம்) பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று கேள்விப்பத்திரங்களை 2003ஆம் ஆண்டு யூன் மாதம் 02ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 3.00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் கட்டடங்கள் திணைக்களம் கிளிநொச்சியில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விபரம் | பதிவு செய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப் படாதகேள் விவைப்புப் பணம் |
|---|---|---|---|
| 1) ஆரம்ப சுகாதார நிலையம் ஆலங்கேணி, பூநகரி | எம்-9 | 3255/= | 500/= |
| 2) ஆரம்ப சுகாதார நிலையம் இராமநாதபுரம் கரைச்சி | எம்-9 | 3255/= | 500/= |
| 3) ஆரம்ப சுகாதார நிலையம் உதயநகர் மேற்கு கரைச்சி | எம்-9 | 3255/= | 500/= |
| 4) ஆரம்ப சுகாதார நிலையம் 4வது மைல்கல் பூநகரி | எம்-9 | 3255/= | 500/= |
| 5) ஆரம்ப சுகாதார நிலையம் கனகாம்பிகைக்குளம் கரைச்சி | எம்-9 | 3255/= | 500/= |
| 6) ஆரம்ப சுகாதார நிலையமும் மருத்துவமாது விடுதியும் இயக்கச்சி, பளை | எம்-8 | 13450/= | 750/= |
| 7) ஆரம்ப சுகாதார நிலையமும் மருத்துவமாது விடுதியும் புளியம்பொக்கணை, கண்டாவளை | எம்-8 | 13450/= | 750/= |
| 8) ஆரம்ப சுகாதார நிலையமும் மருத்துவமாது விடுதியும் ஆனைவிழுந்தான் கரைச்சி | எம்-8 | 13450/= | 750/= |
| 9) ஆரம்ப சுகாதார நிலையமும் மருத்துவமாது விடுதியும் பள்ளிக்குடா பூநகரி. | எம்-8 | 13450/= | 750/= |
| 10) ஆரம்ப சுகாதார நிலையமும் மருத்துவமாது விடுதியும் கௌதாரிமுனை பூநகரி. | எம்-8 | 13450/= | 750/= |

(05) கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்.

(06) கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விபரங்களை கிளிநொச்சி கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**எந்திரி ந.சுந்தரமூர்த்தி**
**பிரதம பொறியியலாளர்**
**கட்டடங்கள்திணைக்களம் (மாகாணம்)**
**கிளிநொச்சி.**

(சி-8124)

# இஸ்ரேல் - பலஸ்தீன சமாதானத் திட்டம்; ஆதரவைப் பெறுவதில் பெரும் நெருக்கடி!

## ஷரோனின் அமைச்சர்கள் சிலர் முரண்

**உத்தேச பலஸ்தீன நாடு தொடர்பான அமெரிக்கா தலைமையிலான சமாதானத் திட்டத்திற்கு இஸ்ரேலிய ஆளும் தரப்பிற்குள் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. இது பிரதமர் ஏரியல் ஷரோனுக்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்துள்ளது.**

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தலைமையில் இஸ்ரேல் பலஸ்தீன சமாதானத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை ஆரம்பத்தில் எதிர்த்த இஸ்ரேலிய பிரதமர் பின்னர் தனது ஆதரவையும் நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். இந்நிலையில் அமைச்சரவையின் ஆதரவையும் பெற்று விடப் போவதாக அவர் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

எனினும் ஷரோனின் அமைச்சரவை இரு வேறு கருத்துக்களை கொண்டு முரண்பட்டு நிற்பதாக அறிவிக்கப்படுகிறது. மேற்படி சமாதானத் திட்டத்திற்கு பெரும்பாலான அமைச்சர்கள் தமது ஆதரவை நல்க முன் வந்துள்ளநிலையில் வலது சாரி கொள்கையுடைய அமைச்சர்கள் சிலர் இதற்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.


2005ஆம் ஆண்டிற்குள் பலஸ்தீனர்களுக்கு தனிநாட்டை உருவாக்கும் திட்டமே அமெரிக்கா தலைமையில் முன்மொழியப்பட்டுள்ளது. இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனும், பலஸ்தீன பிரதமர் மகமுத் அப்பாஸும் ஒரு தடவை சந்தித்துப் பேசியுள்ளமை தெரிந்ததே.

இந்நிலையில் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற பிரதமர் ஷரோன் தீவிர முயற்சி மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அதேவேளை, பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேலியப் படைகள் தமது நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருவதும் தெரிந்ததே.



அல்ஜீரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் தமது வீட்டை இழந்த பெண்ணொருவர் தற்காலிக கொட்டிலில் அமர்ந்திருக்கிறார்.



பாக்தாத்தில் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்று எரிகின்ற நிலையில் அருகில் பாதுகாப்பில் ஈடுபடும் அமெரிக்கப் படைவீரர்.

# அணுவாயுதத் திட்டங்கள் குறித்துப் பேச வடகொரியா நிபந்தனை விதிப்பு!

## -அமெரிக்க மௌனத்திற்கும் ஆட்சேபம்

வடகொரியா அதன் ஆயுதத் திட்டம் குறித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்த நிபந்தனை விதித்துள்ளது.

தென்கொரியா, ஜப்பான் அடங்கலாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தத் தயார். ஆனால் பியாங்யோங்கும், வாஷிங்டனும் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என அது வலியுறுத்தியுள்ளது.


கடந்த மாதம் சீனாவுடன் இணைந்து வடகொரியா நடத்திய முத்தரப்புப் பேச்சுவார்த்தைகளின் போது தாம் தெரிவித்த புதிய யோசனைகள் குறித்து அமெரிக்கா மௌனம் சாதித்து வருகின்றது என்றும் வடகொரியா குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை வடகொரியாவின் அணுவாயுதத் திட்டம் முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்காவும் ஜப்பானும் கோரியுள்ளன.

வாஷிங்டனில் ஜப்பானியப் பிரதமர், அமெரிக்க சனாதிபதி புஷ் இருவரும் செய்தியாளர்களிடம் பேசியபோது,

வடகொரியாவின் அணுவாயுதத்தை சகித்துக் கொள்ள மாட்டோம் என்றும் வடகொரியா அணுவாயுதத் திட்டத்தை முற்றாக ஒழித்து அதை அழிப்பதைத் தவிர அதற்குப் பதிலாக எதையும் ஏற்க முடியாது என்றும் புஷ் கூறியுள்ளார்.

, வடகொரியாவின் அணுவாயுதத்திட்டம் உலகிற்கு விடப்பட்ட சவால் என்றும் வடகொரியா, அணுவாயுதத்தை தயாரிப்பதையோ, வைத்திருப்பதையோ மற்றைய நாடுகளுக்குத் தருவதையோ சகித்துக் கொள்ள மாட்டோம் என்று ஜப்பானியப் பிரதமர் கூறியுள்ளார்.



வரும் மே 29இல் மலை ஏறுதலின் 50ஆவது வருட கொண்டாட்டம் நடைபெறவுள்ள நிலையில் எவரெஸ்ட் சிகரத்தை மூடியிருக்கும் மேக மூட்டம்.

## தாய்வானில் 'சார்ஸ்' தீவிரம்!

சீனாவிலும், ஹொங்கொங்கிலும் 'சார்ஸ்' நோய் தணிந்துவரும் அதேநேரம் தாய்வானில் 'சார்ஸ்' நோய் தீவிரமாகப் பரவிவருகின்றது.

தாய்வானில் இந்நோயினால் இதுவரை அறுநூறு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 75 பேர் பலியாகியுள்ளனர்.

உலக சுகாதார நிறுவனம் இது குறித்து கவலை தெரிவித்துள்ளது.

# விடுமுறை வழங்க மறுத்த உயர் அதிகாரி சுட்டுக்கொலை!

(புதுடில்லி)

மும்பாய் சர்வதேச விமான நிலையத்தில் இந்திய பொலிசார் ஒருவர்விடுமுறை வழங்க மறுத்த தன்து உயரதிகாரியைச் சுட்டுக்கொலை செய்துள்ளார்.

அத்துடன் சிலமணி நேரம் ஆறு பொலிசாரை இவர் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தார்.

சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை விமான நிலைய பயணிகள் வெளியேறும் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவரைச் சரணடைய வைப்பதற்கு உயரதிகாரிகள் நீண்ட நேரம் பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

இதனை அடுத்து இந்த விமான நிலையம் வெறிச சோடிக்காணப்பட்டது. அங்கிருந்துபுறப்பட வேண்டிய விமானங்கள் பலமணிநேர தாமதத்தின் பின்பே புறப்பட்டன.

விமானத்தில் பயணிக்கச் சென்ற பயணிகள் மாற்றுப் பாதையூடாக அனுப்பப்பட்டனர்.

# இந்திய மத்திய அமைச்சரவையில் மாற்றம் மம்தா பனர்ஜிக்கு இட ஒதுக்கீடு இல்லை!

## கதவுகள் திறந்திருப்பதாக வாஜ்பாய் அறிவிப்பு

(புதுடில்லி)

இந்திய மத்திய அமைச்சரவையில் நேற்று முன்தினம் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதுடன் புதிதாக சிலர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் இன்னும் சிறு மாற்றம இடம்பெறும் என பிரதமர் வாஜ்பாய் அறிவித்துள்ளார்.

மூன்று அமைச்சரவை அந்தஸ்து பெற்ற அமைச்சர்கள் மற்றும் ஐந்து இணை அமைச்சர்களுக்கு துணைப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

மற்றும் சில அமைச்சர்களுக்கான துணைப் பொறுப்புக்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

குடியரசு மாளிகையில் இவ் அமைச்சரவை பதவியேற்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர், மத்திய அமைச்சரவையில் சேர திருணாமூல் காங்கிரசுக்கு கதவுகள் திறந்தே இருக்கின்றன என்றும் கூறியுள்ளார்.

இது சம்பந்தமாக மம்தா பானர்ஜியுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெறுவதாகவும்; எந்தக்கட்சியையும் பிளவு படுத்தும் எண்ணம் இல்லை என்றும் கூட்டணியில் உள்ள கட்சிகளுக்குக் கூடுதல் பிரதிநிதித்துவம் அளிக்கவே விரும்புவதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

அத்துடன் ம.தி.மு.க.வைச் சேர்ந்த செஞ்சி இராமச்சந்திரன் பதவி விலகியதையடுத்து, அவருக்குப் பதிலாக அந்தக் கட்சியைச சேர்ந்த வேறு ஒருவர் அமைச்சரவையில் இடம் பெறக் கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.




மலேசியாவில் இந்தோனேசிய தூதரகத்துக்கு முன்பாக சமாதான ஆர்ப்பாட்டம் நடத்தும் மலேசியர்கள்.



ஆர்ஷே விடுதலை இயக்கத்தினருக்கும் இந்தோனேசிய படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் உயிரிழந்த தமது கணவனின் உடலருகில் அழுது கொண்டிருக்கும் ஆர்ஷே மாகாண பெண்மணி

# டோக்கியோ மாநாடு நடைபெறாவிட்டால் இலங்கைக்கு ஈடுசெய்ய முடியா இழப்பு!

## அமெரிக்க திணைக்கள அறிக்கையில் தெரிவிப்பு

**டோக்கியோவில் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவிவழங்கும் உலக நாடுகளின் மாநாட்டில் அமெரிக்க பிரதிச் செயலாளர் ரிச்சார்ட் ஆர்மிரேஜ் பங்கு கொள்வாரென்று அமெரிக்கத் திணைக்களத்தின் பேச்சாளர் லைன் எல்-கெசல் கடந்த வெள்ளிக்கிழமை அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.**

இருபது வருடகால இன முரண்பாட்டினால் சேதமடைந்துள்ள இலங்கையை புனரமைக்கவும், புனர்வாழ் வளிப்பதற்குமான சர்வதேச சமூகத்தின் ஆதரவை இந்த மாநாடு பிரதிபலிக்கச் செய்யும் என்று செயலாளர் ஆர்மிரேஜ் பங்கு கொள்ளவிருக்கும் இந்த மாநாடு தொடர்பான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாடு ஜூன் மாதம் 9ஆம், 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, இலங்கைக்கான புனரமைப்பு, புனர்வாழ்வு சம்பந்தமான உதவிகள் குறித்து செயலாளர் ஆர்மிரேஜ் இந்த மாநாட்டில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச மாநாடு மிக முக்கியமானது என்று செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புனரமைப்பிற்கான சர்வதேச சமூகத்தின் முழுமையான உறுதிமொழியையும் வெளிப்படுத்துவதுடன் இருபது வருடகாலமாக இன முரண்பாட்டினால் சேதமடைந்துள்ள வடக்கு-கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல பகுதியையும் அபிவிருத்தி செய்ய இது உதவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானத்தின் மூலம் வடக்கு-கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல பகுதிகளையும் அபிவிருத்தி செய்ய இது உதவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சமாதானத்தின் மூலம் இலங்கையில் பயனடையும் சகல தரப்பினரையும் ஒட்டு மொத்தமான நிலைப்பாட்டை வெளிப்படுத்த இந்த மாநாடு சந்தர்ப்பமளிக்கின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கம் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று குறிப்பிட்டிருந்த போதிலும் டோக்கியோ மாநாடு குறிப்பிட்டபடி நடைபெறவேண்டும் என்று அமெரிக்கா நம்புகின்றது.

அதுமாத்திரமின்றி இந்த மாநாடு குறிப்பிட்டபடி நடைபெறாவிட்டால் இலங்கை மக்களுக்கு இது ஈடுசெய்ய முடியாத இழப்பாகிவிடும் என்பதை ஜப்பான் நாட்டு அரசாங்கத்தின் கருத்துடன் நாமும் உடன்படுகிறோம். என்றும் அவர் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பல மாதங்கள் இயங்கவில்லை

விசுவமடு பகுதியில் இயங்கி வந்த கால் நடை அபிவிருத்தி சுகாதார வைத்திய நிலையம் பல மாதங்களாக இயங்காமல் பூட்டப்பட்டநிலையில் உள்ளது.

வைத்திய நிலைய பெயர் பலகை மட்டும் தொங்கவிடப்பட்டுள்ளது. இப்பகுதி போதனா ஆசிரியரோ அல்லது உதவி உத்தியோகத்தரோ இங்கு கடமைக்கு வருவதில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (14)

## நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு உழவு இயந்திரங்கள் வழங்கல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் நீர்ப்பாசன அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளும் முகமாக புதிய உழவு இயந்திரங்கள மட்டக்களப்பு நீர்ப்பாசனத் திணைக்களத்திடம வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று, ஏறாவூர் பற்று, பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நீர்ப்பாசனக் குளங்கள், வாய்க்கால்கள், பாரிய அணைகள் பாலம்போன்ற அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளும் முகமாக 55 இலட்சம் ரூபா பெறுமதியான உழவு இயந்திரங்கள் புதிதாக வழங்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால் சிதைந்துபோன நீர்ப்பாசன வளங்கள் அழிந்து சுமார் இருபது ஆண்டுகளுக்கு மேல் கிழக்கில் சிதைவுற்ற பகுதிகளில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளும் முகமாகவே இவ் உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதுவரையும் இங்கு பாவனைக்கு விடப்பட்ட மிகப்பழமை வாய்ந்த உழவு இயந்திரங்களே மட்டக்களப்பு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பாவிக்கப்படுவதாகும். இத்திணைக்கள பொறியியலாளரின் நடவடிக்கையால் புதிய உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாகன விபத்தில் சிக்குண்டு மோ.சைக்கிள் சாரதி பலி!

களுவாஞ்சிக் குடியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற பாரவூர்தி-மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்றவரே பலியானவராவார். பாரவூர்திச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். பலியானவரின் பெயர்விபரம் தெரியவரவில்லை.

## மண்சரிவு மீண்டும் ஏற்படும் அபாயம்; மக்களை உடன் வெளியேறப் பணிப்பு!

இரத்தினபுரி, தெனியாய பகுதிகளில் மண்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதனால் அப்பகுதி மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினரும் புவியியல் ஆராய்ச்சியாளர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பெல்மடுல்ல, லெபாத்த, இரத்தினபுரி பகுதிகளில் அரசியல் சிகளை மேற்கொண்ட தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தனது இடைக்கால அறிக்கையை இரத்தினபுரி அரச அதிபரிடம் கையளித்துள்ளது.

இதேவேளை பேராதனை பல்கலைக் கழகத்தின் புவியியல்துறை பேராசிரியர் கபிலே தஹநாயக்காவின் தலைமையிலான குழு பெல்மடுல்ல பகுதியிலுள்ள கஹவத்த கந்தபகுதி மற்றும் லெபாத்த பகுதியிலுள்ள கொஹம்பகந்த, நிரியல்ல கந்த, வே பொட, ஹேனபாய, அப்பரகம பகுதி மலைகளை ஆராய்ச்சி செய்துள்ளது.

மேலும் இரத்தினபுரி பகுதிகளில் எலபொடகந்த,வேவுகந்த,லெலன் லேனவத்த போன்ற மலைப் பகுதிகளில் மீண்டும் மண்சரிவு ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தெனியாய பகுதியில் யாப்பிடகந்த, இபத்தலவிட்டவத்த மலைப்பகுதியில் குடியிருப்பவர்கள் வேறு இடங்களுக்குச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும் அங்கிருந்து வெளியேறுவது குறித்து மக்கள் விருப்பம் தெரிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வழங்கியுள்ள இடைக்கால அறிக்கையில் கலவான பகுதியிலுள்ள பொத்துப்பிட்டிய, முக்குறுவிட்டகந்த மலைப்பகுதியில் மண்சரிவு ஏற்படக்கூடிய ஆபத்து உடனடியாக இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ்வாறான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவென ஒப்பநாயக்க பகுதிக்கும் ஆராய்ச்சியாளர்கள் புறப்படவுள்ளனர்.

எட்டுப்பேர் கொண்ட ஆராய்ச்சிக் குழுவினர் வழங்கிய இடைக்கால அறிக்கையின்படி மக்களை இந்தப் பகுதியில் இருந்து அப்புறப்படுத்துவது சூழ்நிலையும் அரச அதிபர் உள்ளிட்ட அதிகாரிகள் ஆலோசித்து வருவதாக இரத்தினபுரி உதவி பிரதேச செயலாளர் டொனல் முரகே கூறியுள்ளார்.

## வெள்ளப் பாதிப்பிற்குள்ளான மாவட்டங்களில் ஒரு இலட்சம் மாணவர் கல்வி பாதிப்பு

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

காலி மாத்தறை மாவட்டங்களில் மாத்திரம் ஐம்பதாயிரம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் இம்மாவட்டங்களில் கல்வி நடவடிக்கையை உடனடியாக ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## வட்டக்கச்சி உபதபாலகம் மோசமான நிலையில் இயங்குகிறது!



(அலுவலக செய்தியாளர்)

வட்டக்கச்சி உபதபாலகம் புனரமைக்கப்படாது மிகவும் மோசமான நிலையிலேயே இயங்கி வருகின்றது.

சிறிலங்காப் படையினரால் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றும் நோக்கில் 1996ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சத்ஜெய இராணுவ நடவடிக்கையின் காரணமாக மேற்படி தபாலகம் இடம்பெயர்ந்து சொந்த இடத்தில் இயங்க முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலாலும் திருடர்களின் திருட்டுச் செயலாலும் உபதபாலகத்துக்கு ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் சொந்த இடத்தில் எந்தவித வசதிகளுமின்றி இது இயங்க ஆரம்பித்துள்ளது. அஞ்சல் திணைக்களம் மற்றும் அரச செயலகம் ஆகியவற்றுக்கு இவ் இழப்பீடு, மதிப்புக்கள் வழங்கப்பட்டும் இத்திணைக்களத்தைப் புனரமைப்பதற்கு எந்தவித நிதியும் வழங்காத நிலையில் இவ் உபதபாலகம் இயங்கி வருகின்றது. (லோ)

## அரச சேவை பதவி முறைகள் ஐந்தில் மாற்றம் வருகிறது!

அரசாங்க சேவையில் தற்போது நடைமுறையில் உள்ள ஐந்து பதவி முறைகள் மாற்றியமைக்கப்படவுள்ளன. நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்புடையில் இப்பதவிகள் மாற்றியமைக்கப்படவுள்ளன. இதற்கமைய வேறுபட்ட ஐந்து பதவிகள் ஒரே தரமுடைய பதவியாக மாற்றப்படவுள்ளன.எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர், களஞ்சியப் பொறுப்பாளர்,கணக்குப் பதியுனர், பற்றுச் சீட்டாளர் ஆகிய பதவிகள் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் என்ற பதவியாக மாற்றப்படவுள்ளது. இது தொடர்பான சுற்றுநிருபங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுவிட்டன.

இந்த ஐந்து சேவைகளை மாற்றியமைப்பது தொடர்பாக சகல தொழிற் சங்கங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

## ஜே.வி.பி - சிறீல.சு.க. கூட்டணி பதிவு செய்தலில் சட்டப் பிரச்சினை!

சிறில.சு.க.-ஜே.வி.பி கூட்டணியை அங்கீகரிக்கப்பட்ட கட்சியாகப் பதிவு செய்தலில் சட்டப் பிரச்சினை தோன்றுவதாக சனாதிபதி செயலக அறிக்கை தெரிவிக்கின்றது. தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின்படி ஒரு தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டிருக்கும்போது எந்த ஒரு அரசியல் கட்சியும் பதிவு செய்தல் முடியாது என்பதால் இக்கூட்டணியைப் பதிவு செய்ய முடியாதுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதுபற்றி தேர்தல் ஆணையாளரிடம் பத்திரிகையாளர் கேட்ட போது, அவர் கூறியதாவது, வடக்கு கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் ஜூன் 25 இல் நடைபெறவிருக்கும் நிலையில் எந்தவொரு கட்சியும் புதிதாகப் பதிவுசெய்ய சட்டம் அனுமதிக்காது என்றும் மேலும் பல கட்சிகள் அண்மையில் நிராகரிக்கப்பட்டதையும் குறிப்பிட்டுள்ளார்.

## வன்னியில் கண்ணிவெடி அகற்றும் பிரிவால் ஏப்ரலில் 2742 வெடிபொருட்கள் அகற்றல்

தமிழர் புனர்வாழ்வுக் கழக மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் கடந்த மாதம் வன்னிப்பகுதியில் 2742 வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. மக்கள் குடியிருப்புக்களை அண்டிய பகுதிகள் மற்றும் பல்வேறு இடங்களிலும் சிறிலங்கா இராணுவத்தினரால் புதைக்கப்பட்ட வெடிபொருட்களே அகற்றப்பட்டு வருகின்றன. இந்த வகையில் வெடிக்கும் நிலையில் உள்ள 821 துருப்பு எதிர்ப்பு கண்ணிவெடிகளும் 1923 அபாயம் நிறைந்த மிதி வெடிகளும் என 2742 ஆபத்து நிறைந்த வெடிபொருட்கள் 39262 சதுர மீற்றர் நிலப்பரப்பில் இருந்து அகற்றப்பட்ட மக்களின் சுதந்திர நடமாட்டத்திற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மீட்கப்பட்டுள்ள 2742 அபாயம் நிறைந்த வெடிபொருட்களையும் முற்று முழுதாக மீளப்பயன்படுத்த முடியாதவாறு தகர்த்தழிக்கப்பட்டுள்ளதாகவும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (லோ)

## திருக்குளிர்த்தி பொங்கல் விழா

எதிர்வரும் 02-06-2003 திங்கட்கிழமை சோரன்பற்று தெல்லிப்பளை கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் இரவு 8.00 மணி பரணியில் தவம் இருந்து வாங்கிய அவச் கெல்வன் என்னும் கிந்துநடைக் கூத்தும் இடம் பெறும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை காவடி, பாற்செம்பு, தீச்சட்டி பறவைக் காவடி ஆகிய நேர்த்திகள் மங்கள வாத்தியத்துடன் இடம் பெறும் மாலை 5.00 மணிய ளவில் திருக்குளிர்த்திப் பொங்கல் நிறை வடையுமென ஆலய தர்மகர்த்தா சபையினர் அடியார்களுக்கு அறியத்தருகின்றனர். (ப.)

# பரந்தன் - புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் உரிய நடைமுறைகளின்மையால் ஆபத்து!

## மிதமிஞ்சிய வேகத்தில் வாகனங்கள் பயணம்

(அலுவக செய்தியாளர்)

**பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியில் வாகனங்கள் மிகவும் வேகமாகச் செல்வதால் மக்கள் வீதிப்போக்குவரத்தில் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.**

பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியில் வாகனங்கள் கட்டு மீறிய வேகத்துடன் செல்கின்றன. இதனால் இவ்வீதியில் பெருமளவு தூசி அள்ளிவீசப்படுகின்றது. அவ்வாறு தூசிகள் எழுவதால் வேறுவாகனங்கள் எதுவும் எதிரே வருகின்றனவா என அவதானிக்கக் கூட முடியாதநிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் வீதியால் செல்கின்ற பயணிகள் மற்றும் மோட்டார் ஊர்திகள் விபத்துக்குள்ளாக வேண்டிய அவலநிலை ஏற்படுகின்றது.

எனவே தமிழீழ காவல்துறையினர் மேற்படி வீதிப்பகுதிகளில் வேகக்கட்டுப்பாட்டு நடைமுறையைக் கொண்டுவந்து மக்களின் போக்குவரத்தை உறுதிசெய்வதுடன் இலகுபடுத்தவும் வேண்டும் எனவும் இவ்வீதிகளால் பயணிக்கின்ற மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தற்போதைய சமாதானச் சூழலின் பின்னர் பெருமளவு வெளிமாவட்ட ஊர்திகள் வந்து செல்வதால் அவர்கள் வைத்தியசாலை, பாடசாலை, நீதிமன்றம் மற்றும் முக்கிய இடங்களை முன்னர் அறிந்திராமையால் அவற்றைக் கவனிக்காது வாகனங்களை வேகத்துடன் செலுத்துகின்றனர். அதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அத்துடன் சில முக்கிய சந்திகளில் வீதி ஒழுங்குக்கு அமையாது அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களால் உயிரைப் பறிக்கும் வகையிலான விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவற்றை அகற்றும் பட்சத்திலும் வீதியில் முக்கியமான இடங்களை வெளிக்காட்டும் குறியீடுகள் மற்றும் வேகக்கட்டுப்பாடு நடைமுறைகள் போன்றவற்றைச் செயற்படுத்தும் பட்சத்திலும் விபத்துக்களை குறைக்கமுடியும். இந்த நடவடிக்கைகளைக் கையாளும் பட்சத்தில தருமபுரம் பகுதியில் ஏற்பட்ட விபத்துப் போன்ற விபத்துக்களை தவிர்த்திருக்க முடியும் என இம் மக்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். (லோ)

## விபத்தைத் தவிர்க்க வேண்டுகை!

முல்லைத்தீவு பிரதான வீதியிலுள்ள வட்டுவாகல்ப் பாலத்தில் போடப்பட்டுள்ள கிரவல்க் கும்பிகளால் விபத்துக்கள் நேரக் கூடிய அபாயம் தோன்றியுள்ளது.

கும்பமாகவுள்ள கிரவல் பரவப்படாமையால் போக்குவரத்துக்குப் பெரும்இடையூறாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. அத்தோடு சிறு விபத்துக்களும் ஏற்பட்டு வருகின்றன. (20)



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் தம்பலகாமத்தில் புதிதாகத் திறக்கப்பட்ட சிறுவர் பாடசாலைக்கு சிறுவர்களும் ஆசிரியர்களும் தொண்டர்களும் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

## இணையத்தளத்தினுள் நுழையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இணையத்தளம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாட்டுத் திட்டங்களை விளக்குவதற்கும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்த திட்ட முன்னெடுப்புக்களை உலகத்திற்கு வெளிக்காட்டுவதற்கும் இவ் இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

WWW troonline .Org என்ற இணைய முகவரிக்குச் சென்று சகலரும் புனர்வாழ்வுப் பணிகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாமென தமிழர் புனர் வாழ்வுக்கழக செய்திக்குறிப்பேடு தெரிவிக்கின்றது. (சோ)

## மக்கள் மீள் குடியேறியுள்ள பகுதிகளில் பாம்புகளின் தொல்லை அதிகரிப்பு!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீள்குடியமர்ந்துள்ள கிராமப் புறங்களில் பாம்புக் கடித் தொல்லை அதிகரித்து வருகின்றது.

தற்போதைய காலநிலைக்காகத் தமது இருப்பிடங்களில் இருந்து புறப்பட்டு மக்களின் குடியிருப்புக்குள்ளும், பாதைகளிலும் பிரவேசித்திருக்கும் இப்பாம்புகள் பலரைத் தீண்டி வருகின்றன.

இதனால் வைத்தியசாலைகளில் பாம்புக் கடிக்காகத் தற்போது சிகிச்சை பெற்று வருவோர் தொகை அதிகரித்துள்ளது.

மக்கள் மீளக் குடியேறியுள்ள இக்கிராமங்களில் முழுமையாகத் துப்பரவுப் பணி செய்யப்பட்டு சீர் செய்யப்படாததாலேயே பாம்புகளின் நடமாட்டம் வெகுவாகக் காணப்படுகின்றது.

## வெள்ளப் பெருக்கு, மண்சரிவினால் 266 பொதுமக்கள் உயிரிழப்பு!

### மதிப்பீட்டு அறிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

தென்பகுதியில் ஆறு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண்சரிவுகள் காரணமாக 266 பேர் பலியாகி உள்ளனர் என்று தேசிய இடர் முகாமைத்துவ அலுவலகம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்திலேயே கூடுதலானோர் இந்த அனர்த்தங்களுக்குப் பலியாகினர். இந்த மாவட்டத்தில் 137 பேரை வெள்ளமும், மண் சரிவுகளும் பலிகொண்டன.

மாத்தறை மாவட்டத்தில் 80 பேர் பலியாகினர். கடைசியாகக் கிடைத்த அறிக்கைகளின் படி ஒருலட் சத்து 66 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

மாத்தறை மாவட்டத்தில் மாத்திரம் 61 ஆயிரம் குடும்பங்கள் வீடுகளை இழந்துவிட்டன.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஐம்பதாயிரம் குடும்பங்கள் வீடுகளை இழந்துள்ளன. இந்த மாவட்டத்தில் 26 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. மேலும் 26 ஆயிரம் வீடுகள் ஓரளவு சேதமடைந்துள்ளன.

## கிளி.தமிழ் சங்கத்தின் திருவள்ளுவர் விழா

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி தமிழ் சங்கத்தினரால் திருவள்ளுவர் விழா கொண்டாடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் யூன்திங்கள் 8ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள மேற்படி விழாவின் இறுதிநாளன்று ஏற்கனவே நடாத்தப்பெற்ற எழுத்துத்தேர்வு, நாவன்மை, குறள் இசைப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் 2002 ஆம் ஆண்டு க.பொ.த.(உ/த) பரீட்சைக்குத் தோற்றிதமிழில் அதிதிறமை (ஏ) சித்தி பெற்றமாணவர்களுக்கும்.

அகில இலங்கை ரீதியில் "பா" ஓதல், நடனம், கட்டுரைப்போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்கள், தூய தமிழில் திருவள்ளுவர் ஆண்டையும் குறிப்பிட்டு திருமண விழா, பூப்புனித நீராட்டுவிழா அல்லது நிறுவன நிகழ்வுக்கான அழைப்பிதழ்களை வெளியிட்டவர்கள், தூயதமிழில் கோவில் திருவிழா அல்லது நிறுவன நிகழ்வுகளை வெளியிட்டவர்களுக்கும் ஊக்கப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனரென கிளிநொச்சி தமிழ்ச்சங்க செயலர் வே.பரமநாதபிள்ளை தெரிவித்துள்ளார். (சோ)

## கொல்களத்தில் துர்நாற்றம் மக்கள் பெரும் அசௌகரியம்!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி திருநகர் பகுதியில் அமைந்துள்ள கொல்களத்திலிருந்து துர்நாற்றம் வீசுவதன் காரணத்தால் அதனை அண்டிய பகுதிகளில் வதியும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

மேற்படி கொல்களப் பகுதியில் மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டு கழிவுப் பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டதன் பின்னரும் அப்பகுதியில் இரத்த வாடையினாலும் கழிவு நீரினாலும் துர்நாற்றம் வீசுவதன் காரணத்தினால் அருகிலுள்ள குடியிருப்பாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

மேற்படி கொல்களம் மக்கள் சூழவுள்ள பகுதியிலிருந்து அகற்றி மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களுக்கு வழிசமைக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரமாட்டார்களாவென அப்பகுதி மக்கள் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)

## வரவு-செலவுத்திட்ட நிதியை யாழ். இற்கு வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியினையாழ். மாவட்டத்திற்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் நிதி.அமைச்சரும் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.என். சொக்சியுடன் அமைச்சர் தி. மகேஸ்வரன் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் யுத்தத்தினால் சேதமடைந்த பாடசாலைகள், ஆலயங்கள், வீடுகள் என்பவற்றை புனரமைப்பதற்கு உதவியாக இந்த நிதியினை வழங்குமாறு அவர் தனது கோரிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பிரதேச செயலகப்பிரிவில் பாதை புனரமைப்பு வாரம்

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் பாதை புனரமைப்பு வாரம் இடம்பெற்று வருகிறது. இதற்கு அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு தலைமை தாங்குகிறார். இதற்கான இயந்திர உபகரணங்களை நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எல்.அதாவுல்லா வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்த பாதை புனரமைப்பு வாரம் இன்று 26 ஆம் திகதியுடன் நிறைவுபெறும். இதற்கு திருக்கோவில் பிரதேச வாசிகளும், ஊழியர்களும், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.

மேற்படி தாண்டியடி, தம்பிவில், விணாயகபுரம், கள்ளியந்தீவு, திருக்கோவில், தம்பட்டை ஆகிய பிரதேசங்களிலுள்ள உள் வீதிகள் செப்பனிடப்பட்டு புனரமைப்பு செய்துவருவதாகத் தெரிகிறது. இதற்கமைய கிறவல் மண் வீதிகள் அனைத்தும் மக்களின் பங்களிப்புடன், இயந்திரங் களின் உதவியுடனும் புனரமைப்பு செய்யப்பட்டுவருகிறது.

## சுவிஸ் வாழ் தமிழ் மக்கள் ஆதரவற்றோருக்கு உதவி!

(அலுவலக செய்தியாளர்)

சுவிஸ் நாட்டிலுள்ள தமிழ் மக்களினாலும் அங்குள்ள ஆலயங்களினாலும் ஆதரவற்றோர் பராமரிப்பு இல்லங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவற்றோர் பராமரிப்பு இல்லங்களான மங்கையற்கரசி மகளிர் இல்லம், கதிரொளி சிறுவர் இல்லம், அன்புச்சோலை முதாளர் பேணலகம் ஆகியவற்றிற்கு சுவிசிலுள்ள மூன்று ஆலயங்களும், பாரதி இல்லம், குழந்தை பராமரிப்பு இல்லம் ஆகியவற்றிற்கு சுவிஸ்வாழ் தமிழ் மக்களாலும் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் முதியோர் இல்லக் கட்டடம் அமைப்பதற்காக சுவிசில் இயங்கும் தமிழ் இளைஞர்கள் உதவிநல்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## மீன்பிடித்தொழில் பாதிப்பு

அண்மையில் கடற் பகுதியில் ஏற்பட்ட தாழமுக்கத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேல் மப்பும் மந்தாரமுமாக இருந்து வருகிறது. இதனால ஆயிரக்கணக்கான மீனவ குடும்பங்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களில் தென்பருவ பெயர்ச்சிக் காற்று வீசத்தொடங்கினால் கடலில் மீன்பிடிப்பது கஷ்ட நிலையைத் தோற்றுவிக்குமென மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# அடுத்த வரவு செலவுத் திட்டத்தினூடாக அதிக வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படலாம்!

## அமைச்சர் திசாநாயக்க நம்பிக்கை

(கொழும்பு)

அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் அதிக வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் இருக்கும் என்று அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். முன்னூற்று எண்பது பில்லியன் ரூபா வருமானத்தை அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் அரசு எதிர்பார்க்கின்றது.

வெளிநாட்டுக் கடன்களுக்காக செலுத்த வேண்டிய வருடாந்த வட்டி தவணைப் பணம் ஆகியன நாற்பது பில்லியன் ரூபாவால் குறைக்கப்படும்.

கடந்த ஆண்டு முதலீடு செய்யப்பட்டதை விட அதிக முதலீட்டை அரசு அடுத்த நிதியாண்டில் மேற்கொள்ளும்.

அரசின் புதிய பொருளாதாரக் கொள்கைகளின் மூலம் பெறப்பட்டிருக்கும் வாய்ப்புக்கள் மேலதிக தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத் தரும்.

நிதி உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கு ஆண்டு தோறும் பத்து பில்லியன் ரூபா செயற்திட்டத்தை வேலைவாய்ப்புகளுக்காக விசேடமாக வழங்கும்.

இத்தகைய நிதியுதவிகள் அடுத்த ஆண்டுக்கு மட்டுமன்றி தொடரும் ஆண்டுகளுக்கும் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் உப்புக்குளத்தில் மீள் குடியேற்றம்

மன்னார் உப்புக்குளத்தில் கடந்த இருபது வருடங்களிற்கு முன்னர் அங்கிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளக்குடியேற உள்ளன.

பத்தொன்பது குடும்பங்களைச் சேர்ந்த தொண்ணூற்றொன்பது பேர் இவ்வாறு மீளக் குடியமரவுள்ளனர்.

இவர்கள் அனைவரும் நேற்றுக் காலை இரண்டு பேருந்துகளில் கற்பிட்டியில் இருந்து உப்புக் குளத்துக்குச் சென்று நிலைமையைப் பார்வையிட்டனர். (ஈ)


# நினைவலைகள்

மழலையாய் நாட்டுப் பற்றாளனாய்



1948 □ 12 □ 26 — 2003 □ 04 □ 27

அமரர்

## நாட்டுப்பற்றாளன் V.T.A. விசுவா

*V.T.A. விசுவா!*
*எத்தனை காலமாய் எத்தனை படங்களில்*
*எத்தனையெத்தனை பாத்திரக்குரலில் ஒலித்தீர்*
*அத்தனை நினைவும் விழிகளை நிறைக்க – இன்றைமை*
*அடுத்த படத்தின் குரலுக்காகத் தேடுகிறது*
*எ(உ)ங்கள் பிரிவு*

அன்னாரின் குடும்பத்தார்க்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(3279)

பொறுப்பாளர், போராளிகள், பணியாளர்கள்.



## கிளி-மாவட்ட தொழில்நுட்பக் கல்லூரி

### தொழில்சார் பயிற்சி நெறிக்கான

# விண்ணப்பம் கோரல்

மீள் கட்டுமானப் பணிகளைத் துரிதப்படுத்தவும், இளைஞர், யுவதிகளுக்கான உடனடி வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டும், பின்வரும் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

1. மேசன் பயிற்சி நெறி - 06 மாதம்
2. மரவேலைப் பயிற்சிநெறி - 06 மாதம்

பூநகரி, கண்டாவளை, பளைப் பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள இப்பயிற்சி நெறிக்கு எழுத, வாசிக்கத் தெரிந்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். பயிற்சிக்காலத்தின் போது ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூபா இரண்டாயிரம் (2000/-) வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் உரிய பிரதேச செயலகங்களில் பெயர் விபரங்களை 01-06-2003க்கு முன் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதிபர்,
தொழில்நுட்பக்கல்லூரி,
ஆனைவிழுந்தான்.

வன்னேரிக்குளம் வீதி,
கிளிநொச்சி.

(சி.7880)





# பயணியர் பேருந்துப் புதிய பணி



கிளிநொச்சி, பரந்தன், இயக்கச்சி, புதுக்காட்டுநகர், பளை வழித்தடத்தில் 01.06.2003 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு

## கிளிநொச்சி — முகமாலை

| | கிளிநொச்சி | பரந்தன் | இயக்கச்சி | புதுக்காட்டுச்சந்தி | முகமாலை (பளை) |
|---|---|---|---|---|---|
| பகல் | 03.30 | 03.45 | 04.20 | 04.30 | 04.45 |

## முகமாலை (பளை) — கிளிநொச்சி

| | முகமாலை(பளை) | புதுக்காட்டுச்சந்தி | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| காலை | 07-30 | 07.45 | 08.20 | 08.30 | 08.45 |

முகாமையாளர்
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்.

# பயணியர் பேருந்துப் புதிய பணி

முல்லைத்தீவு மாந்துவில், புதுக்குடியிருப்பு, விசுவமடு, பரந்தன், புதுக்காட்டுநகர், பளை வழித்தடத்தில் 01.06.2003 ஆம் நாள் பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதை பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு

## முல்லைத்தீவு — முகமாலை

| | முல்லைத்தீவு | புதுக்குடியிருப்பு | விசுவமடு | பரந்தன் | புதுக்காட்டுச்சந்தி | முகமாலை (பளை) |
|---|---|---|---|---|---|---|
| பகல் | 12.15 | 01.00-01.30 | 02.30 | 03.30 | 03.55 | 04.15 |

குறிப்பு:- புதுக்குடியிருப்பு பேருந்து நிலையத்தில் பேருந்துகள் வந்தடையும் நேரமும், புறப்படும் நேரமும் தரப்பட்டுள்ளது

முகாமையாளர்
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்.

(சி.8125)



சிந்தனைக்கு

போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால், எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 26-05-2003

## சம பங்காளிகளெனின்...!

சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாடு திட்டமிட்டவாறு நடைபெறும். இதில் மாற்றம் எதுவும் இடம்பெறமாட்டாது என ஜப்பான் அரசு ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் அறிவித்துவிட்டது. விடுதலைப்புலிகள் கலந்து கொண்டாலும் சரி, கலந்து கொள்ளாமல் போனாலும் சரி டோக்கியோ மாநாடு திட்டமிடப்பட்டவாறு நடைபெறும் என்பதே இதன் அர்த்தமாகும்.

விடுதலைப்புலிகள் இயக்கமும் இதனைத் தெளிவாகஉணர்ந்தே உள்ளது. இதன் காரணமாகவோ அன்றி வேறு காரணங்களின் அடிப்படையிலோ விடுதலைப்புலிகள் இயக்கமும் டோக்கியோ மாநாடு பிற்போடப்பட வேண்டும் என்றோ, புலிகள் பங்குபற்றாத நிலையில் சிறிலங்காவிற்கு வழங்கும் நிதியில் வெட்டுச் செய்ய வேண்டும் என்றோ, ரத்துச் செய்ய வேண்டும் என்றோ கோரவில்லை. தமக்கு நிதி, நிர்வாக நடவடிக்கைகளை கையாளக்கூடிய போதிய அதிகாரம் கொண்ட இடைக்கால சபை நிர்வாக அலகு குறித்து உறுதியான பதில்கள் சில கிடைக்காது விட்டால் மாநாட்டில் தாம் பங்குபற்றப் போவதில்லை என்று மட்டுமே அறிவித்துள்ளனர்.

இதேவேளை விடுதலைப்புலிகள் பங்குபற்றினாலும் சரி, பங்குபற்றாது போனாலும் சரி சிறிலங்கா அரசிற்கு கணிசமான நிதியுதவி கிடைக்கப்பெறும் என்பது எதிர்பார்க்கக் கூடியதாகவே உள்ளது அதாவது, சிறிலங்கா அரசிற்குக் கிடைக்கப்பெறும் நிதியுதவியானது பெரியளவில் வெட்டுக்குள்ளாகும் என எதிர்பார்க்கவில்லை. சிறிலங்கா அரசு கடந்த காலங்களை விடக் கூடுதலான நிதியுதவியைப் பெறுவதற்கான வாய்ப்பு உண்டு என்றே எதிர்பார்க்கலாம்.

நிலைமை அவ்வாறு இருந்தும்,உதவி வழங்கும் நாடுகள்– குறிப்பாக ஜப்பான், நோர்வே, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் யாவும் விடுதலைப்புலிகளை டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு தொடர்ச்சியாக ஏன் அழைப்பு விடுதல் வேண்டும்? சிறிலங்கா அரசும் விடுதலைப்புலிகளை அழைத்துச் செல்வதில் ஏன் அக்கறை காட்டி வருகின்றது.

இவ்வாறாக உதவி வழங்கும் நாடுகளும் சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப்புலிகள் இன்றியே நடத்தத் தீர்மானிக் கப்பட் டதும், பெரும்பாலும் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் மாநாட்டிற்கு விடுதலைப்புலிகளை வலிந்து அழைப்பது ஏன்? இதற்குப் பதிலளிப்பவர்கள்–உதவி வழங்குபவர்களும் சரி, சிறிலங்கா அரசும் சரி, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் புனரமைப்பிற்கெனப் பெருமளவு நிதியுதவி கிடைக்கப் பெறவுள்ளதனால் அதனைப் பெற்றுக் கொள்வதில் புலிகள் சமபங்காளிகளாக இருத்தல் வேண்டும் எனக் கூறுகின்றனர்.

சிறிலங்காவிற்கு உதவி வழங்குபவர்களைப் பொறுத்து விடுதலைப்புலிகளையும் சமபங்காளிகளாக ஆக்கிக் கொள்வதென்பது அவசியமானதாகின்றது. இதன் மூலம் தாம் வழங்கும் நிதியுதவிக்கு விடுதலைப்புலிகளும் உத்தரவாதம் அளிப்பவர்களாகவும் பொறுப்பாளிகளாகவும் ஆக்கப்படுகின்றார்கள். இதனால் விடுதலைப்புலிகள் அளிக்கும் உத்தரவாதங்கள், வாக்குறுதிகள் என்பனவற்றைப் புலிகள் உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாகின்றனர்.

ஆனால், டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்குபற்றினாலும் கூடக் கிடைக்கப்பெறும் நிதியுதவியானது, விடுதலைப்புலிகளின் கைகளுக்கோ அன்றி வடக்கு – கிழக்கு புனரமைப்பிற்கான அமைப்பிற்கோ வந்து சேருவதற்கு வாய்ப்புக்கள் இல்லை. அதாவது டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்குபற்றினாலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிதி உதவி சிறிலங்கா அரசின் கைகளிலேயே கொடுக்கப்படும் / போய்ச் சேரும். அந்நிதியைச் செலவு செய்யப் புலிகளை அரசாங்கம் பங்குதாரிகளாகவும் ஆக்கிக்கொள்ள மாட்டாது.

ஏனெனில், சிறிலங்கா அரசியல்யாப்பு அதற்கு இடமளிக்கமாட்டாது. அத்தோடு, சிறிலங்காவில் அதிகாரத்தில் இருப்பவர்களும் இதற்கு ஆதரவளிக்கப் போவதில்லை. அதாவது பெறப்படும் நிதிக்கும் புலிகள் பொறுப்பேற்பவர்களாக இருப்பர். ஆனால், அதனைப் பெறவோ, பயன்படுத்தவோ புலிகள் அதிகாரம் அற்றவர்களாக இருப்பர். வேறு விதமாகக் கூறின் புலிகள் பார்வையாளர்களாக இருக்க ஆட்சியாளர்கள் செலவீடு செய்பவர் களாக இருப்பர்.

உதவி வழங்கும் நாடுகளும், அமைப்புகளும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு–கிழக்குப் பகுதிகளில் அரசாங்கம் மேற்கொள்ளும் புனரமைப்புப் பணிகளில் தமது கவனம் இருக்கும். வழங்கப்பட்ட நிதி உதவிகள் மோசடி செய்யப்படுவதோ, துஷ்பிரயோகம் செய்யப்படுவதோ நடைபெற அனுமதிக்கப் போவதில்லை எனக் கூறினும், இது நடைமுறையில் சாத்தியப்பாடானதல்ல. சில வேளைகளில் இந்நிதியானது வடக்கு–கிழக்கிலேயே பயன்படுத்தப்பட்டாலும்கூட, அது யுத்தத்தினால் பெரும் துன்பம் அடைந்த தமிழ் மக்களின் கைகளுக்கு வந்து சேரமாட்டாது. இதனைக் கடந்த கால வரலாறே வெளிப்படுத்தப் போதுமானதாக உள்ளது.

இந்நிலையில் தான் புலிகள் டோக்கியோ மாநாட்டில் பங்குபற்ற வேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது. சமாதானப் பேச்சு வார்த்தையிலும் சரி, டோக்கியோ மாநாட்டிலும் சரி, சமபங்குதாரர்களென அரச தரப்புக் கூறிக் கொண்டாலும் விடுதலைப் புலிகளைத் தேவைக்கேற்ற விதத்தில் பயன்படுத்திக் கொள்ளவே சிறிலங்கா அரசு விழைகின்றது. அதாவது விடுதலைப்புலிகளைப் பங்குதாரர்கள் எனக் கூறிப் பொறுப்பையும் கடமைகளையும் சுமத்திவிட்டு, அரசாங்கம் உலகிடம் பெரும் நிதி உதவியினைப் பெற்றுத் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யப் பார்க்கின்றது. ஆகையினால் டோக்கியோ மாநாட்டில் புலிகள் ஏன் பங்குபற்றுதல் வேண்டும்? சிறிலங்கா அரசிற்கு வழங்கப்படும் சிறிலங்கா அரசு பெற்றுக் கொள்ளும் நிதி உதவிக்கு விடுதலைப்புலிகள் ஏன் பொறுப்பேற்க வேண்டும்? சாப்பிடுபவர்கள் அவர்களாக இருக்கை யில், அதனைப் பெற்றுக் கொடுப்பவர்களாக மட்டும் புலிகள் ஏன் இருக்க வேண்டும்?

## மக்களை விழிப்படையச் செய்யும் ஜே.வி.பி.யின் 10 நாள் பிரச்சாரப் போர்!

### –நேற்று முதல் ஆரம்பிப்பு

(கொழும்பு)

நாட்டில் பத்து நாள் பிரச்சாரப் போர் ஒன்றை மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) நேற்று ஆரம்பித்துள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் அரசியல் நிலை பற்றி மக்களுக்கு அறிவுறுத்தி மக்களை விழிப்படையச் செய்யும் நோக்கில் ஜே.வி.பி கட்சி இந்தப் பத்து நாட்களுக்கான பிரச்சாரப் போரை ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி,மாத்தளை,நுவரேலியா,காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, குருணாகல் திருகோணமலை, பொலனறுவை, அம்பாறை, மொனராகலை,இரத்தினபுரி, புத்தளம், கேகாலை,அனுராதபுரம், பதுளை ஆகிய ஜே.வி.பிக்குச் செல்வாக்குள்ளதாகக் கருதப்படும் 19 மாவட்டங்களில் மேற்படி பிரச்சார நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 10 இலட்சம் துண்டுப் பிரசுரங்களும் தயாராகவிருப்பதாகவும் தெரியவருகிறது.

## அமைச்சுப் பொறுப்பற்ற அமைச்சர்கள் தமக்கான பொறுப்புகளையளிக்க வேண்டுகை!

(கொழும்பு)

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் 10 பேர் தமக்கு எந்த விதமான பொறுப்புக்களும் ஒப்படைக்காமை பற்றி பிரதமரிடம் கவலையுடன் முறைப்பாடு செய்துள்ளனர். அத்துடன் தமக்கு வர்த்தமானி அறிவித்தல் மூலம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சர்களினதும் அமைச்சர்களல்லாதோர்களினதும் பொறுப்புக்களை வேறு படுத்தல் தொடர்பாகத் தேவையான சிபார்சுகளைப் பெற நியமிக்கப்பட்ட றொகான் பெத்தியாகொட குழுவினரின் தீர்ப்பை உடனடியாகச் செயற்படுத்துமாறு அவர்கள் கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் தமக்கு ஒருவித பொறுப்பும் வழங்கப்படாததால் அமைச்சரல்லாத ஒருவர் அவரின் வாகனங்களையும், அலுவலகங்களையும் திருப்பி ஒப்படைக்கத் தீர்மானித்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான அமைச்சர்களின் நியமனம் பற்றி வெளிவந்த வர்த்தமானியில் அமைச்சர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற விதி மட்டும் குறிப்பிடப்பட்டிருப்பதால் அவர்களுக்குச் சட்டப்படியான பொறுப்புக்கள் வழங்கமுடியாதென்ற கருத்தை அமைச்சர்கள் கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## வடக்கு- கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் திட்டமிட்டபடி ஜூன் 25 இல் நடைபெறும்

### தேர்தல் ஆணையாளர் கூறுகின்றார்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

அவசியமும் தவிர்க்க முடியாததுமான காரணங்களுக்காக முன்னர் ஒத்திவைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல்கள் வரும் ஜூன் 25 ஆம் திகதி நடத்தியே தீருவதாகத் தேர்தல் ஆணையர் தயானந்த திசாநாயக்க 'திவயின' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

இத் தேர்தலுக்காக முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களின்படியே நடக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் முன்பு தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களைத் தாம் நிராகரிப்பதாகப் புலிகளும், தமிழர் தேசியக் கூட்டமைப்பும் எம்பிக்களும் தெரிவிப்பதாகவும் அப்பத்திரிகை கூறுகின்றது.

## இயற்கை அனர்த்தக் காரணிகளை கண்டறிய விசேட குழு அமைப்பு!

(கொழும்பு)

மழையினால் ஏற்பட்ட மிகையான வெள்ளப் பெருக்கிற்கும் மண்சரிவுக்குமான காரணிகளைக் கண்டறிவதற்கான விசேட செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வெள்ளப் பெருக்கினாலும் மீண்சரிவினாலும் பல்வேறு மாவட்டங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. இத்தகைய அனர்த்தங்கள் எதிர்காலத்தில் ஏற்படாது இருப்பதற்கான வழிவகைகளை இந்தக் குழு வழங்கும்.

சூழல்துறை சார்ந்த நிபுணர்களையும் இந்தக் குழுவில் நியமிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்தக் குழுவினர் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைத் தெரிவிப்பதோடு இத்தகைய அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு முன்னர் மக்களுக்கு வழங்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்குவார்கள். இந்தக் குழு அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் நியமிக்கப்படும்.

## பதவிக்காக ஏக்கமுறும் அர்ஜுனா!

1996ம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றிய சிறிலங்கா அணித்தலைவர் அர்ஜுனா ரணதுங்க சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கான தலைவரைத் தெரிவு செய்யும் "தேர்தலில்" தாம் தோற்றுவிடுவேனோ என்ற ஆதங்கத்துடன் இருக்கின்றார்.

தமது வாழ்நாளில் அரைவாசிக்கும் மேலான காலத்தை மேற்படி சபையின் வளர்ச்சிக்கே பாடுபட்டதாகக் கூறும் அவர் எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெறவுள்ள கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தேர்தலில் தலைவர் பதவிக்குப் போட்டியிடவுள்ளார். இதுவரை எதிர்த்துப் போட்டியிடும் திலங்க சுமதிபாலாவுக்கு செல்வாக்கு அதிகமாகவே காணப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிறிலங்காவின் கிரிக்கெட் துறையை வளர்ச்சியுறச் செய்வதே தமது ஒரே நோக்கம் என்றும் கிராமப்புறங்களில் இவ் விளையாட்டை பிரபல்யப்படுத்திச் சிறந்த வீரர்களை உருவாக்குவதாகவும் தமக்கு இச்சந்தர்ப்பம் கிடைக்காத போது வரும் காலங்களில் பங்களாதேஷ் அணி கூட எமது அணியை வெற்றியீட்டி விடும் என்றும் கவலை தெரிவித்துள்ளார்.

## நான்காவது போட்டியிலும் அவுஸ்திரேலியா வென்றது

அவுஸ்திரேலியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுக்குமிடையில் போர்ட்வ் ஸ்பெயினில் நேற்று முன்தினம் நடைபெற்ற 4 வது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் 67 ரன் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியை அடுத்து மொத்தம் 07 நாட்கள் கொண்ட இந்தத் தொடரில் இதுவரை நடந்த 04 நாட்கள் போட்டியிலும் அவுஸ்திரேலியா முன்னணியில் உள்ளது.

நேற்று முன்தினப் போட்டியில் முதலில் விளையாடிய அவுஸ்திரேலியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 05 விக்கெட்டுக்களை இழந்து 286 ஓட்டங்களை எடுத்தது.

287 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனும் இலக்குடன் களம் இறங்கிய மே.இ தீவு அணி, 45.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 219 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.



# விடுதலைப்புலிகளின் நிவாரண உதவிகள் தென்பகுதி மக்களின் அபிப்பிராயத்தை மாற்றும்

## அமைச்சர் மகிந்த விஜயசேகர

(கொழும்பு)

தென் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விடுதலைப்புலிகள் நிவாரண உதவிகளை வழங்கியமை, விடுதலைப்புலிகள் தொடர்பாக தென்பகுதி மக்கள் கொண்டிருந்த எதிர்மறையான அபிப்பிராயத்தை முற்றிலும் மாற்றிவிடும் என்று அமைச்சர் மகிந்த விஜயசேகர தெரிவித்துள்ளார்.

அதேசமயம், டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றுவார்களானால் நாட்டின் தெற்கு வடக்குப் பகுதிக்கான ஒத்துழைப்பு மேலும் பலமடையும் எனத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் தென் பகுதி விஜயம் இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியமானது எனவும் அமைச்சர் மகிந்த விஜயசேகர தெரிவித்தார்.

# விடுதலைப்புலிகளால் கோரப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபையை வழங்குக

## ரணிலை வற்புறுத்த இ.தொ.கா.முடிவு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளினால் கோரப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகத்தை அவர்களுக்கு வழங்குவது உசிதமானது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவிப்பதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

தொழிலாளர் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் நேற்று இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

நேற்று பல்லேகலவில் நடைபெற்ற தொழிலாளர் காங்கிரசின் நிறைவேற்றுக்குழுவின் கூட்டத்திலேயே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை நோக்கிச் செல்லும் வேளையில் சகல இனத்தவர்களுக்கும் நன்மை அளிக்கும் வகையில் விடுதலைப்புலிகளின் இக் கோரிக்கைக்குச் செவிசாய்ப்பது சிறந்தது என்றார்.

# மட்டக்களப்பில் ஈ.பி.டி.பி.யினருக்கு பொலிஸ் பாதுகாப்பு அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டு நகர் மற்றும் அதனை சூழவுள்ள புறநகர் பிரதேசங்களில் அண்மைக்காலமாகத் தொடர்ந்து இடம்பெற்றுவரும் தாக்குதல் சம்வங்களையடுத்து அந்தப்பிரதேசங்களில் தற்போது பொலிசார் சோதனை நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

பொலிஸ் தரப்பு தகவல்களின்படி இம் மாதம் தாக்குதல் சம்பவங்கள் இப்பிரதேசங்களில் அதிகரித்துள்ளதாகவும் இம்மாதம் இதுவரை ஆறு கைக்குண்டுத் தாக்குதல்களும் இரண்டு ஆட்கொலைச்சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவங்களை அடுத்து தீவிரப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கையின்படி மட்டு நகரில் உள்ள புளொட், ஈ.பி.டி.பி. மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி ஆகிய கட்சிகளின் அலுவலகங்களுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் அந்தக் கட்சிகளின் உறுப்பினர்களை உரிய பாதுகாப்பின்றி வெளியே நடமாட வேண்டாம் என்றும் படைத்தரப்பினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தமிழ்க் கட்சிகளை பொறுத்தவரை ஈ.பி.டி.பி.க்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஈ.பி.டி.பியின் மட்டு அலுவலகப் பொறுப்பாளர் பரணிதரன், பிரதீபன் வெளியிட்ட தகவல்களின்படி நேற்று முன்தினம் வரை தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிசாரின் எண்ணிக்கை 12 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றார்.

பொலிஸ் பாகாப்பின்றி வெளி நடமாட்டம் தவிர்க்கப்படவேண்டும் என படைத்தரப்பு அறிவுறுத்தி இருப்பதையும் அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி, புளொட் ஆகிய கட்சிகளுக்கு வழமையான பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தாலும் தேவை ஏற்பட்டால் மேலதிகப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இதனைத் தவிர இக்கட்சிகளின் அலுவலகங்கள் அமைந்துள்ள வீதிகள் ஊடாக 24 மணிநேர பொலிஸ், இராணுவ மற்றும் விடேச அதிரடிப்படையின் வீதி ரோந்து நடவடிக்கைகள் தற்போது விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதன் போது வீதிகளில் திடீர் சோதனைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக இச் சோதனையின் போது மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் மீது தீவர கவனம் செலுத்துவதுடன் இதன்போது தலைக்கவசம் கழற்றப்பட்டு உடல் சோதனையுடன் வாகனம் தொடர்பான ஆவணங்களும் பொலிசாரினால் பரிசீலிக்கப்பட்டு பதிவு செய்யப்படுகின்றன.

### வவுனிக்குளத்தில்...

ணைகளை துணுக்காய் காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றதோடு, பிரேத பரிசோதனைக்காக மல்லாவி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு மரண விசாரணை அதிகாரி இல்லாத காரணத்தினால் கிளி. அக்கராயன் மருத்துவமனைக்கு மரண விசாரணைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (பா)

### வடக்கு– கிழக்கு மாவட்டப் போட்டிகள்

# மென்பந்து கிரிக்கெட் அம்பாறை அணி சம்பியன்!

## வலைப்பந்தாட்டத்தில் யாழ். அணி வெற்றி

வடக்கு - கிழக்கு மாவட்ட அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளையில் நேற்று நிறைவு பெற்றது.

இதில் மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் அம்பாறை மாவட்ட அணி, யாழ்.மாவட்ட அணியை மூன்று விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. 15 ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் முதலில் ஆடிய யாழ். அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய அம்பாறை அணி 13.5 ஓவரில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் திருமலை அணியை எதிர்த்து விளையாடிய யாழ். மாவட்ட அணி வெற்றி பெற்றது. மேற்படி வெற்றிகள் மூலம் மென்பந்து கிரிக்கெட்டில் அம்பாறை மாவட்ட அணியும் வலைப்பந்தாட்டத்தில் யாழ். மாவட்ட அணியும் இவ்வருடத்திற்கான சம்பியன்களாகத் தெரிவாகின.

# புனரமைப்பு

(கிளிநொச்சி)

ராணுவ ஆக்கிரமிப்பால் கடந்த எட்டு வருடங்களாக இயங்காத நிலையில் இருந்த உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் தற்போது புனரமைக்கப்பட்டு நேற்று கழகங்களுக்கிடையில் சிநேகபூர்வ போட்டியொன்றை நடத்தியது.

இதில் உருத்திரபுரம், ஸ்கந்தா அணிகள் கலந்து கொண்டன. போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது.

### புலிகளின்...

இந்த நிர்வாக அமைப்பானது அரசமைப்புக்கு வெளியில் உருவாக்கப்படும் ஒன்று என்பதால் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தால் எந்த நடவடிக்கையும் எடுக்க இயலாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிலையில் வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கின்ற யோசனையை சிறிலங்கா சமசமாஜக் கட்சி நிராகரித்திருக்கின்றது.

### சிரான் கூட்டம்...

வுத் திட்டங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை அந்தக் கடிதத்தில் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியுள்ளார்.இது குறித்து இலங்கைக்கான ஜப்பான் மற்றும் நோர்வே தூதுவர்களுக்கும் தமிழ்ச்செல்வன் அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டம் கிளிநொச்சியில் நேற்றும், இன்றும் இடம்பெற ஏற்பாடாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

### எரிக் சொல்ஹெய்ம்...

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இவர் நாளை வன்னி வந்து விடுதலைப் புலிகளையும் சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நோர்வேயின் பிரதி வெளிவிகார அமைச்சர் விதார் கெல்கேசன் இன்று கொழும்பிற்கு விஜயம் செய்யவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எரிக் சொல் கெய்மும், விதார் கெல்ஹேசனும் கடந்த வாரத்திலேயே கொழும்பிலிருந்து நோர்வே திரும்பியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# தமிழீழ சட்டக்கல்லூரி மாணவர்கள் கவனத்திற்கு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ சட்டக்கல்லூரியின் 04வது அணிஉள்வாரி மாணவர்களின் இறுதி ஆண்டுப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

இம்முடிவுகளைக் கிளிநொச்சி தமிழீழ சட்டக்கல்லூரியில் தற்போது பார்வையிடலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பரீட்சைப் பெறுபேறுகளைத் திங்கள் முற்பகல் 1.00 மணிக்கு முன்பும், செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாமெனவும், மற்றும் வெளிவாரி சட்டக்கற்கை நெறி 01ஆம் அணிமாணவர்களின் இறுதி ஆண்டு விரிவுரைகள் எதிர்வரும் 31-05-2003 அன்று சனிக்கிழமை கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ சட்டக்கல்லூரியில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதென்பதனை, தமிழீழ சட்டக் கல்லூரி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (சோ)

# ஏ-9வீதியை 24 மணிநேரமும் திறப்பது குறித்தும் பரிசீலனை

(கொழும்பு)

ஏ-9வீதியை 24மணிநேரமும் போக்குவரத்திற்குத்திறந்து விடுவது குறித்து சிறிலங்கா அரசு பரிசீலித்து வருகின்றது.

இதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியையும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு நாடி உள்ளது. இதன்முதற்கட்டமாக ஏ-9 வீதியில் உள்ள சோதனைச் சாவடிகளுக்கு இரவு நேரத்தில் மின்சார வசதிசெய்து கொடுக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்திடம் அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நோர்வே பயணிகள் கப்பலில் திடீர் வெடிப்பு சம்பவம்

## இரு மாலுமிகள் பலி, பலர் படுகாயம்

அமெரிக்க மியாமித் துறைமுகத்தில் 3400 பிரயாணிகளுடன் தங்கியிருந்த நோர்வே கப்பலொன்றின் இயந்திரப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வெடிப்பில் இரு மாலுமிகள் பலியாகியுள்ளனர். 20 பேர் காயமடைந்தனர்.

இக்கப்பல் துறைமுகத்திற்கு வந்தடைந்த ஒரு மணி நேரத்தில் இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் இதில் பயணம் செய்த பயணிகள் எவரும் காயமடையவில்லை. பயணிகள் அனைவரும் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டனர்.



விபத்துக்குள்ளான கப்பலிலிருந்து பயணிகளை வெளியேற்றும் மீட்புப்படகுகள்

### தென்மாகாணசபை...

குறியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித்தலைவர் மகிந்தராஜபக்சவுக்கு நெருங்கிய நண்பரான இவர் சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் அவரது வீட்டிற்குச் சென்று வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடைபெற்றஇடத்தில் பொலிஸ் தலைமையகம், சனாதிபதி மாளிகை,துறைமுக தலைமையகம் மற்றும் காவலரண்களும் அமைந்துள்ளன.

கார்,வான் என்பவற்றில் வந்தவர்களே இத்தாக்குதலை நடத்தியதாகவும் இவர்மீது ஆறுதடவைகள் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும் இதனையடுத்து அந்த இடத்திலேயே அவர் மரணமடைந்ததாகவும் இவர்கள் சனாதிபதியின் பாதுகாப்புப்பிரிவு அதிகாரிகள் அணிந்திருக்கும் சீருடையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இத்தாக்குதல் தொடர்பாக விசாரணைநடத்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினிதிஸாநாயக்க, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஹெட்டியாராட்சி முன்னாள் மானிப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி திலகரட்ண அடங்கிய குழுவொன்றை பொலிஸ்மா அதிபர் நியமித்துள்ளார்.

### அமெ. இராஜதந்...

ருந்தனர். பல மில்லியன் ரூபாக்கள் மோசடியாகப் பெற்றுக்கொண்டு வியட்நாம், இந்தியா, சிறிலங்கா பிரஜைகளுக்கு விசாவழங்கியமை தொடர்பாகவே இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கண்ணீர் அஞ்சலி

## சின்னத்துரை தங்கம்மா

## கந்தையா செல்லத்துரை

## மா.சிறிரங்கம்

எமது வைத்தியசாலையில் கடமை புரியும் சி.ஆனந்தலிங்கம் அவர்களின் தாயார் சின்னத்துரை தங்கம்மா அவர்களும் க.இராஜேஸ்வரி அவர்களின் தந்தையார் கந்தையா செல்லத்துரை அவர்களும் எமது வைத்தியசாலையில் கடமைபுரிந்து ஓய்வு பெற்றுச் சென்ற திரு.மா. சிறிரங்கம் அவர்களும் காலமாகி விட்டார்கள். இவர்களினது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்: சேவையாளர் நலன்புரிச்சங்கமும்,
அபிவிருத்திச் சபையும்,
அரசினர் வைத்தியசாலை, மல்லாவி.

(சி-7884)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.